### விபத்து மற்றும் இயற்கை மரணமடைந்த

# 5 அரசு ஊழியர்களின் குடும்பத்தினருக்கு ரூ.4.38 கோடி நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக.15-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.8.2025) தலைமைச் செயலகத்தில், அரசு ஊழியர்களுக்கு ஆயுள் மற்றும் விபத்துக் காப்பீடு உள்ளிட்ட வங்கிச் சலுகைகளை கட்டணமின்றி வழங்கிட 7 முன்னோடி வங்கிகளுடன் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டதன் அடிப்படையில், பாரத ஸ்டேட் வங்கி மற்றும் கனரா வங்கி ஆகிய வங்கிகளால் வழங்கப்பட்ட, விபத்து மற்றும் இயற்கை மரணமடைந்த 5 அரசு ஊழியர்களின் குடும்பத்தினருக்கு விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு தொகை, திருமண உதவித் தொகை மற்றும் உயர்கல்வித் தொகையாக 4 கோடியே 38 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசின் 2025-26-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், நிதியமைச்சர் அவர்கள் தாக்கல் செய்தபோது, அரசு அலுவலர்கள் எதிர்பாராத விதமாக விபத்தில் இறந்து போனாலோ அல்லது விபத்தின் காரணமாக நிரந்தர ஊனமடைந்தாலோ தனிநபர் விபத்து காப்பீட்டு தொகையாக 1 கோடி ரூபாய் நிதியினையும், விபத்தில் இறந்த அரசு அலுவலரின் குடும்பத்தில் உள்ள திருமண வயதை எட்டியுள்ள மகளின் திருமண செலவுகளுக்காக மகள் ஒருவருக்கு தலா 5 இலட்சம் ரூபாய் வீதம், இரண்டு மகள்களுக்கு 10 இலட்சம் ரூபாய் வரை நிதியுதவியும், விபத்து காரணமாக இறந்த அரசு அலுவலரின் குடும்பத்தில் பள்ளிக்கல்வியை நிறைவு செய்து கல்லூரியில் உயர்கல்வி பயின்றிடும் அவர்களின் குழந்தைகளுக்கான உயர்கல்விக்கான உதவித்தொகையாக 10 இலட்சம் ரூபாய் வரையும், அரசு அலுவலர்கள் தங்களது பணிக்காலத்தில் எதிர்பாராமல் இயற்கை மரணம் அடைந்தால் ஆயுள் காப்பீட்டு தொகையாக 10 இலட்சம் ரூபாயும் வழங்கிட அரசு ஊழியரின் ஊதியக்கணக்கை பராமரித்து வரும் வங்கிகளின் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக, அரசு ஊழியர்களுக்கு ஆயுள் மற்றும் விபத்து காப்பிட்டுத் தொகை மற்றும் பிற வங்கிச் சலுகைகளை கட்டணமின்றி வழங்குவதற்காக 19.05.2025 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி, கனரா வங்கி, ஆக்சிஸ் வங்கி, பாங்க் ஆஃப் பரோடா மற்றும் யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா ஆகிய 7 முன்னோடி வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், அரசு ஊழியர்கள் மேற்கண்ட ஏழு வங்கிகளில் சம்பளக் கணக்குகளைப் பராமரித்தால், மேற்கூறிய சலுகைகள் இலவசமாக வழங்கப்படும். இச்சலுகைகள் தவிர, அரசு ஊழியர்களுக்கு தனிநபர் கடன்கள், வீட்டுக் கடன்கள் மற்றும் கல்விக் கடன்கள் ஆகியவற்றில் சலுகை வட்டி விகிதங்களை வழங்கவும் வங்கிகள் ஒப்புக்கொண்டுள்ளன. தற்போது வரை, இத்திட்டத்தின் கீழ் 7,31,670 அரசு ஊழியர்கள் தங்களது ஊதிய கணக்கினை மேற்கண்ட ஏழு வங்கிகளில் இணைத்துள்ளனர்.

தமிழ்நாடு அரசிற்கும், 7 வங்கிகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டப் பிறகு, 5 அரசு ஊழியர்கள் இயற்கையாகவும் மற்றும் எதிர்பாராத விபத்தினாலும் உயிரிழந்துள்ளனர். மறைந்த அந்த அரசு ஊழியர்களின் குடும்பத்தினரின் நலன் கருதி, பாரத ஸ்டேட் வங்கி மற்றும் கனரா வங்கி ஆகிய வங்கிகளால் வழங்கப்பட்ட விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு தொகை, திருமண உதவித் தொகை மற்றும் உயர்கல்வி உதவித்தொகையான 4 கோடியே 38 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் வழங்கினார்.

இந்நிகழ்வில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நிதித்துறை செயலாளர் (செலவினம்) பிரசாந்த் மு.வடநெரே, கருவூலம் மற்றும் கணக்குகள் துறை இயக்குநர் திருமதி தி.சாருஸ்ரீ, பாரத ஸ்டேட் வங்கியின் சென்னை வட்டாரத்தின் தலைமை பொது மேலாளர் விவேகானந்த் சௌபே, பொது மேலாளர் ஜோபி ஜோஸ் மற்றும் கனரா வங்கியின் துணை பொது மேலாளர் ராஜேஷ் குமார் வர்மா ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

### முரசொலி மாறன் 92வது பிறந்தநாள்

## தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் தருமபுரியில் திருவுருவப்படத்திற்கு

# மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

**சென்னை, 'முரசொலி' வளாக முகப்பிலுள்ள முரசொலி மாறன் திருவுருவச் சிலைக்கு கழக முன்னணியினர் மாலை அணிவிக்கின்றனர். மாவட்டக் கழகத் தோழர்களுக்கு சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்**



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், ஏற்கனவே திட்டமிட்டபடி தருமபுரியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவிருப்பதால்;

முத்தமிழறிஞர் கலைஞரின் மனச்சாட்சியாக விளங்கியவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூளையாக செயல்பட்டவரும் ஒன்றிய அமைச்சராக இருந்து அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்று மிகச் சிறப்பாக பணியாற்றியவருமாகிய முரசொலி மாறன் அவர்களின் 92வது பிறந்த நாளினை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், ஏப்ரல் 17 அன்று தருமபுரியில் முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

அதேநேரத்தில் வருகிற 17.8.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் கோடம்பாக்கம், `முரசொலி' அலுவலகத்தில் அமைந்துள்ள முரசொலி மாறன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கழக முன்னணியினர் மலர்மாலை அணிவிக்கின்றனர்.

அதுபோது ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**நாள் : 14 -8 -2025.** **சென்னை மாவட்ட தி.மு.க.,**

---

## ஜப்பானின் - ஹிகோகி பவர் டூல்ஸ் நிறுவனம் சார்பில் - ரூ.700 கோடியில்

# 1000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் - மின் கருவிகள் உற்பத்தி ஆலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

**சென்னை. ஆக. 15-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (14.8.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த கோகி ஹோல்டிங்ன் துணை நிறுவனமான ஹிகோகி பவர் டூல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், செங்கல்பட்டு மாவட்டம், மஹிந்திரா வோர்ல்டு சிட்டியில் அமைந்துள்ள தொழிற் பூங்காவில், ரூ.700 கோடி உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் சுமார் 1000க்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மின் கருவிகள் உற்பத்தி ஆலை அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.**

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இலக்கு நிர்ணயித்து, அதனை விரைவில் எய்திடும் வகையில் அதிக முதலீடுகளை ஈர்த்திடவும், தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுவதாக, ஒன்றிய அரசின் 2024-25 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**ஹிகோகி பவர் டூல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த உலகளாவிய நிறுவனமான கோகி ஹோல்டிங் ஜப்பான், ஜெர்மனி, சீனா, அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் உற்பத்தி ஆலைகளைக் கொண்டுள்ளது. பெங்களூருவை தலைமையிடமாகக் கொண்டுள்ள அதன் துணை நிறுவனமான ஹிகோகி பவர் டூல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், 15க்கும் மேற்பட்ட விற்பனை அலுவலகங்கள், 500க்கும் மேற்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் 100க்கும் மேற்பட்ட சேவை மையங்களுடன் விரிவான வலையமைப்பை கொண்டுள்ளது.

ஹிகோகி பவர் டூல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், செங்கல்பட்டு மாவட்டம், மஹிந்திரா வோர்ல்டு சிட்டியில் அமைந்துள்ள தொழிற் பூங்காவில், ரூ.700 கோடி உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் சுமார் 1000க்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மின் கருவிகள் உற்பத்தி ஆலை அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நேற்றையதினம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, கோகி குழுமத்தின் உலகளாவிய தலைமைச் செயல் அலுவலர் பிரதாப் தெய்வநாயகம், கோகி இந்தியா நிறுவனத்தின் இயக்குநர் பாலசுப்ரமணியன் கோதண்டராமன், உற்பத்தித் திட்டத்தின் தலைவர் தமிழரசன் கலைவாணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (14.8.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த கோகி ஹோல்டிங்–ன் துணை நிறுவனமான ஹிகோகி பவர் டூல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், செங்கல்பட்டு மாவட்டம், மஹிந்திரா வோர்ல்டு சிட்டியில் அமைந்துள்ள தொழிற் பூங்காவில், ரூ.700 கோடி உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் சுமார் 1000–க்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மின் கருவிகள் உற்பத்தி ஆலை அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, கோகி குழுமத்தின் உலகளாவிய தலைமைச் செயல் அலுவலர் பிரதாப் தெய்வநாயகம், கோகி இந்தியா நிறுவனத்தின் இயக்குநர் பாலசுப்ரமணியன கோதண்ட ராமன், உற்பத்தி திட்டத்தின் தலைவர் தமிழரசன் கலைவாணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### ரூ. 31 கோடி மதிப்பீட்டில் – 7.315 கி.மீட்டர் நீளத்திற்கு

# மத்திய பக்கிங்ஹாம் கால்வாய் புனரமைக்கும் பணி!

## அமைச்சர் துரைமுருகன் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தனர்!

சென்னை, ஆக.15-

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் சென்னை, சேப்பாக்கத்தில் 31.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மத்திய பக்கிங்ஹாம் கால்வாயில் 7.315 கி.மீட்டர் நீளத்திற்கு புனரமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார்கள்.

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் நேற்று (14.8.2025) சென்னை, சேப்பாக்கத்தில் 31.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மத்திய பக்கிங்ஹாம் கால்வாயில் சிவானந்தா சாலை லாக் நகர் முதல் ராஜா அண்ணாமலைபுரம் வரை 7.315 கி.மீட்டர் நீளத்திற்கு புனரமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார்கள்.

மத்திய பக்கிங்காம் கால்வாய் சேப்பாக்கம், திருவல்லிக்கேணி. மந்தைவெளி, நந்தனம், மயிலாப்பூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதியிலிருந்து வடியும் வெள்ள நீர் கால்வாயாகவும், கூவம் நதி மற்றும் அடையாறு நதியின் மூலம் வெள்ள நீரை கடலுக்கு செலுத்துகிற வெள்ள நீர் கடத்தி கால்வாயாகவும் செயல்படுகிறது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மத்திய பக்கிங்காம் கால்வாயை தூர்வாரி புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில் மத்திய பக்கிங்காம் கால்வாயின் நீர் தேக்க திறனை அதிகப்படுத்தும் வகையில் 1 மீட்டர் ஆழத்திற்கு அதிநவீன தூர்வாரும் இயந்திரங்களின் உதவியுடன் தூர்வாரப்படுவதன் மூலம் கால்வாயின் வெள்ள நீர் கடத்தும் திறன் வினாடிக்கு 2,500 கன அடியாக உயரும். இதன் பயனாக சேப்பாக்கம், திருவல்லிக்கேணி. மந்தைவெளி, நந்தனம், மயிலாப்பூர்ஆகிய பகுதிகளில் இருந்து வெள்ள நீர் வடிந்து மத்திய பக்கிங்காம் கால்வாய் மூலம் விரைவில் கடலுக்கு சென்றடையும்.

மேலும், பக்கிங்காம் கால்வாயின் இரு கரைகளையும் பலப்படுத்தி,மரக்கன்றுகள் மற்றும் நடைபாதை அமைத்தல், நான்கு இடங்களில் சிறுவர் பூங்காக்கள் அமைப்பதுஆகிய அழகுப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, நீர்வளத்துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், நீர்வளத்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் சு.கோபாலகிருஷ்ணண் உள்பட அரசு அலுவலர்கள், நீர்வளத்துறை பொறியாளர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---

### காமராசர் அரங்கத்தில் இசை அரங்கம் – நடன அரங்கம் – கவியரங்கம் – ஊடக அரங்கம்

# தொல். திருமாவளவன் பிறந்தநாள் - தமிழர் எழுச்சி நாள்!

## கமல்ஹாசன் எம்.பி. – கே.பாக்யராஜ் – ஐ.லியோனி வாழ்த்துரை – தொல், திருமாவளவன் எம்.பி. ஏற்புரை!

சென்னை, ஆக.15-

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. பிறந்தநாளான ஆகஸ்ட் 17 - தமிழர் எழுச்சி நாளை முன்னிட்டு, நாளை 16.8.2025 சனிக்கிழமை அன்று சென்னை காமராசர் அரங்கத்தில் இசை அரங்கம், நடன அரங்கம், ஊடக அரங்கம், வாழ்த்தரங்கம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இதில் எழுச்சித் தமிழர், விடுதலை சிறுத்தைகள் கட்சி நிறுவனர், தலைவர் தொல்காப்பியன் திருமாவளவன் ஏற்புரை நிகழ்த்துகிறார்.

சிறப்பு விருந்தினர்களாக இயக்குநர் கமல்ஹாசன் எம்.பி., கே.பாக்யராஜ், ஐ.லியோனி பங்கேற்கின்றனர்.

வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன் பிறந்த நாளை முன்னிட்டு



16.8.2025 அன்று சென்னை காமராசர் அரங்கத்தில் மாலை 4 மணிக்கு ஸ்டீபன் ராயல் குழுவினரின் இசைப் பாய்ச்சல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அன்று மாலை 6.00 மணிக்கு நடைபெறும் நடன அரங்கத்தில் கலைமாமணி ஜாஹிர் உசேன் குழுவினரின் நடன நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மாலை 7.00 மணியளவில் நடைபெறும் கவியரங்க நிகழ்ச்சியை இயக்குநர் கே.பாக்யராஜ் அவர்கள் துவக்கி வைத்து உரை நிகழ்த்துகிறார்.

இந்நிகழ்ச்சிக்கு கவிஞர் விவேகா தலைமை வகிக்க, வி.சி.க. துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு வரவேற்புக் கவிதை வாசிக்கிறார்.

இதில் கவிஞர்கள் ஆண்டாள் பிரியதர்ஷினி, இளைய கம்பன், தஞ்சை இனியன், அருண்பாரதி, லாவரதன், புனித ஜோதி ஆகியோர் கவிப்பொழிவு நிகழ்த்துகின்றனர்.

இரவு 10 மணிக்கு நடைபெறும் ஊடக அரங்கத்தில் 'மதச்சார்பின்மை காப்போம்' என்ற தலைப்பில் 'யூடூ புரூட்டஸ்' மைனர், யூட்யூபர் மதன் கௌரி, பேரலை அ.மில்ட்டன், இந்திரகுமார் தேரடி, 'நடுவிரல்' யூட் யூபர் புஷ்பராஜ், ப்ளாக் ஷீ யூ ட்யூபர் அனு ஆகியோர் பங்கேற்கின்றனர்.

**கமல்ஹாசன் எம்.பி. வாழ்த்து**

அன்று இரவு 11 மணிக்கு நடைபெறும் வாழ்த்தரங்கத்தில் மக்கள் நீதி மையம் தலைவர் கமல்ஹாசன், தமிழ்நாடு பாடநூல் நிறுவனத் தலைவர் - ஐ.லியோனி, காவல்துறை கூடுதல் இயக்குநர் (ஓய்வு) வே. வனிதா, திரைப்பட இயக்குநர் லட்சுமி ராமகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துப் பொழிவாற்றுகின்றனர்.

வி.சி.க. பொதுச் செயலாளர்கள் ம.செ.சிந்தனை செல்வன் எம்.எல்.ஏ., து. ரவிக்குமார் எம்.பி. மற்றும் எஸ்.எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ., ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ., பனையூர் பாபு எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இந்நிகழ்ச்சிகளை வி.சி.க. நிர்வாகிகளான ஏ.சி.பாவரசு, வன்னி அரசு, கு. கா.பாவலன், தகடூர் தமிழ்ச்செல்வன், இளஞ்சேகுவேரா, அ.பாலசிங்கம் ஆகியோர் ஒருங்கிணைக்கின்றனர்.